Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 92/2020 |
| Police station | : | |
| Deposition of witness for Prosecution | : | PW 1 |
| Name | : | Philowminraj(Sub Inspector) |
| Father Name/Husband Name | : | Michael |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.07.2022.

**முதல் விசாரணை தொடர்ச்சி –**

தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒரு பாலித்தின் பைக்குள் உள்ள 27 எண்ணிக்கையிலான copper drapper, 100 எண்ணிக்கையிலான Copper lock plates, 69 எண்ணிக்கையிலான Copper clips, 3 அடி நீளமுள்ள Copper conduct wire மற்றும் 2 அடி நீளமுள்ள Copper conduct wire 31.12.2019 அன்று கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட 27 எண்ணிக்கையிலான copper drapper (**சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 100 எண்ணிக்கையிலான Copper lock plates (**சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 69 எண்ணிக்கையிலான Copper clips (**சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 3 அடி நீளமுள்ள Copper conduct wire மற்றும் 2 அடி நீளமுள்ள Copper conduct wire (**சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எதிரி கொடுத்த மறுஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினமே காரமணம் கூறி கைது செய்தேன். கைது செய்த நபரையும் அன்றைய தினம் 19.30 மணியளவில் RPF நிலையம் கடலூர் துறைமுக சந்திப்பில் கொண்டுவந்தேன். எதிரியை நிலையம் கொண்டு வந்த பின்னர் அவருடைய உறவினருக்கு தெரிவித்தேன்.

பின்னர் அன்றைய தினமே எதிரியின் மீது குற்ற எண்.3/2019 ல் பிரிவு 3(a) RP (UP) Railaway Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். பின்னர் 01.01.2020 அன்று எதிரியுடன் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் படிவம் 91 யுடன், கனம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன் **(படிவம் 91 அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனது விசாரணையில் 06.01.2020 அன்று வழுதலாம்பட்டு கிராம நிர்வாக அலுவலர் திரு.சந்தானகிருஷ்ணனை அனுகி பொருட்கள் கைப்பற்றப்பட்ட கடையின் உரிமை ஆவணம் பெற்றேன். பின்னர் 09.01.2020 அன்று கடலூர் முத்திரை ஆய்வாளர் திரு.டேனியல் என்பவரிடம் இருந்து எடை இயந்திரம் சம்பந்தமான உரிமம் பற்றி ஆவணத்தை பெற்றேன். 17.01.2020 அன்று சாட்சியான சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். 21.01.2020 அன்று சாட்சியான பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். 01.02.2020 அன்று RPF உதவி ஆய்வாளர் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். 06.02.2020 அன்று கடலூர் C.T.O (வணிகவரித்துரை) அலுவலகத்தில் உதவி ஆணையர் கணேஷ் என்பவரை விசாரித்து எதிரி வணிக வரி செலுத்தியுள்ளாரா என்று ஆவணம் பெற்றேன். 22.02.2020 அன்று திரு.கற்பூர சுந்தரபாண்டியன் S.S.E. TRD Cuddalore என்பவரை நிலையம் அழைத்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை அவர் முன்னிலையில் ஆஜர்படுத்தி அதற்கான சான்றிதழ் பெற்றேன். அன்றைய தினமே அவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். 25.02.2020 அன்று RPF சாட்சி சந்திரமோகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்துக்கொண்டு 22.05.2020 ம் தேதி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.